பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
23 06 2025 7 15
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஈரான் மீதான தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், எண்ணெய்க் கப்பல்கள் செல்லும் முக்கிய வழித்தடமான **Hormuz** ஜலசந்தி பகுதியை மூட அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

2. நாட்டில் தேவையான அளவுக்கு பெட்ரோல் மற்றும் சமையல் எரிவாயு கையிருப்பில் உள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

3. விவசாயிகளுக்கு உகந்த புதிய வேளாண் தொழில்நுட்பங்களை உருவாக்குவது அவசியம் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

4. ஜம்மு-கஷ்மீரில் இயல்பு நிலை திரும்பி சுற்றுலாத் தொழில் மீண்டும் வளர்ச்சியடைந்து வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

5. இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இரண்டாவது இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 90 ரன் எடுத்துள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

ஈரான் மீதான தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், எண்ணெய்க் கப்பல்கள் செல்லும் முக்கிய வழித்தடமான **Hormuz** ஜலசந்தி பகுதியை மூட அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

ஈரான் நாடாளுமன்றத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ள அந்நாட்டு அரசு ஊடகம், தேசிய பாதுகாப்பு கவுன்சில் இறுதி முடிவை மேற்கொள்ளும் என்றும் கூறியுள்ளது.

உலகில் மேற்கொள்ளப்படும் எண்ணெய்க் கப்பல் போக்குவரத்தில் ஐந்தில் ஒரு பகுதியும், திரவ எரிவாயு போக்குவரத்தில் மூன்றில் ஒரு பகுதியும் **Howmuz** ஜலசந்தி வழியாக மேற்கொள்ளப்படும் நிலையில், ஈரான் அரசின் இந்த முடிவு, சர்வதேச அளவில் பெட்ரோலியப் பொருட்கள் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் என தெரிகிறது.

இதனிடையே ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. **Abbas Araghchi** ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடினை அவசரமாக சந்திப்பதற்காக இன்று மாஸ்கோ செல்கிறார்.

இதனிடையே அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஈரானில் ஆட்சி மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அந்நாட்டின் தற்போதைய தலைமையால் நாட்டிற்கு புத்துயிர் கொடுக்க முடியுமா என்பது குறித்து கேள்வி எழுப்பியுள்ள அதிபர் திரு. ட்ரம்ப், ஈரான் அணுசக்தி நிலையங்களுக்கு எதிரான அமெரிக்காவின் தாக்குதலை பாராட்டியுள்ளார்.

<<<<>>>>

ஈரானில் இருந்து மேலும் 287 இந்தியர்கள் பத்திரமாக தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு தில்லி விமான நிலையம் வந்தடைந்த இவர்களை வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிட்டா வரவேற்றார்.

இதுவரை 8 விமானங்கள் மூலம் ஈரானில் இருந்து ஆயிரத்து 713 இந்தியர்கள் தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

முன்னதாக நேற்று மாலை ஒரு விமானம் மூலம் ஈரானின் **Mashhad** நகரில் இருந்து 311 இந்தியர்கள் புதுதில்லி அழைத்து வரப்பட்டனர்.

<<<<>>>>

நாட்டில் தேவையான அளவுக்கு பெட்ரோல் மற்றும் சமையல் எரிவாயு கையிருப்பில் உள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இஸ்ரேல் - ஈரான் இடையேயான தாக்குதல் காரணமாக நாட்டில் எரிபொருள் வினியோகம் பாதிக்கப்படாத வகையில், தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக கூறியுள்ளார்.

மத்திய கிழக்கு நிலவரத்தை இந்தியா உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும், பல்வேறு நாடுகளில் இருந்து பெட்ரோலியப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**Hormuz** ஜலசந்தி பகுதி மூடப்படுவதால் இந்தியாவிற்கான எரிபொருள் இறக்குமதியில் எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும் திரு. ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

விவசாயிகளுக்கு உகந்த புதிய வேளாண் தொழில்நுட்பங்களை உருவாக்குவது அவசியம் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் போபாலில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் வேளாண் பொறியியல் நிறுவன விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்களிடையே உரையாற்றிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப நாட்டின் பல்வேறு பகுதிகளில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

சிறிய ரக எந்திரங்கள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான மாற்று முறைகளை கண்டறிவதோடு அனைத்து தரப்பு விவசாயிகளின் வளர்ச்சியை ஊக்குவிப்பது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மண்வளத்தைப் பேணிக் காத்து உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதோடு புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதான் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உழவர் திருவிழாக்கள் நடத்தப்பட இருப்பதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் இயல்பு நிலை திரும்பி சுற்றுலாத் தொழில் மீண்டும் வளர்ச்சியடைந்து வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பஹல்காம் தீவிரவாத தாக்குதலால் ஏற்பட்ட அசாதாரண சூழல் விலகி தற்போது அங்கு அமைதி நிலவுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக பஹல்காமிற்கு சுற்றுலாப் பயணிகள் மீண்டும் அதிகளவில் வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகள் காரணமாக வடகிழக்கு மாநிலங்களிலும், ஜம்மு-கஷ்மீரிலும் வளர்ச்சிப் பணிகள் பெருமளவு மேற்கொள்ளப்படுவதாகவும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவின் உரைகள் அடங்கிய இரண்டு நூல்கள் புதுதில்லியில் இன்று வெளியிடப்படுகிறது.

கடந்த 2 ஆண்டுகளில் குடியரசுத்தலைவர் ஆற்றிய 51 உரைகள் **'Wings to Our Hopes'** மற்றும் **'Ashaon Ki Udaan'** என்ற பெயரில் நூலாக தொகுக்கப்பட்டுள்ளது.

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் வெளியீட்டுப் பிரிவு வெளியிட உள்ள இந்த நூல்களின் இரண்டாம் தொகுதிகளை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட உள்ளார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இணையமைச்சர் திரு. எல். முருகன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

<<<>>>>

பல்கலைக்கழக துணைவேந்தர்களின் தேசிய மாநாட்டை குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர், உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டாவில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் 'எதிர்கால உயர்கல்வி குறித்த சிந்தனை - இந்தியாவின் முக்கியப் பங்களிப்பு' என்ற மையக் கருத்தின் அடிப்படையில் விவாதங்கள் நடைபெறுகிறது.

இதில் நாட்டின் பல்வேறு பல்கலைக்கழங்களைச் சேர்ந்த 300 துணைவேந்தர்கள் நேரிலும், சுமார் 200 பேர் காணொலி வாயிலாகவும் பங்கேற்க உள்ளனர்.

<<<>>>>

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இந்தியா நக்சலைட் பாதிப்பு இல்லாத நாடாக உருவெடுக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கட் மாநிலம் ராய்ப்பூரில் நக்சலைட் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மாநிலங்களின் காவல்துறை தலைவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், மத்திய-மாநில அரசுகளின் சரணடையும் கொள்கைகளைப் பயன்படுத்தி, நக்சலைட்டுகள் வன்முறையைக் கைவிட்டு தேசிய நீரோட்டத்தில் இணைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆயுதங்களை ஒப்படைத்து சரணடையும் நக்சலைட்டுகளின் மறுவாழ்வுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கை மழைக்காலத்திலும் தொடரும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

இதனிடையே திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கையில் மத்திய

அரசு, மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து செயல்படும் என்று குறிப்பிடடுள்ளார்.

முன்பு நக்சலைட் பாதிப்புக்கு ஆளான பிஜப்பூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் தற்போது வளர்ச்சிப் பணிகள் அதிகளவில் மேற்கொள்ளப்படுவதையும் திரு. அமித் ஷா சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<>>>>

நான்கு மாநிலங்களுக்கு உட்பட்ட ஐந்து சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பதிவான வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெறுகிறது.

குஜராத்தின் **Kadi, Visavadar** ஆகிய சட்டப்பேரவை தொகுதிகளிலும், கேரளாவின் **Nilambur**, மேற்குவங்கத்தின் **Kaliganj**, பஞ்சாபின் **Ludhiana** தொகுதிகளிலும் கடந்த 19ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெற்றது.

<<<>>>>

ரயில் நிலையங்கள் மற்றும் ரயில்களில் நிகழும் குற்றச் சம்பவங்களைத் தடுக்க ஒருங்கிணைந்த தேசிய அளவிலான செயல்திட்டம் வகுக்கப்பட இருப்பதாக ரயில்வே துறை தெரிவித்துள்ளது.

ரயில்வே காவல்துறை தலைவர்களின் அகில இந்திய மாநாடு புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இம்மாநாட்டிற்கு தமைை வகித்துப் பேசிய ரயில்வே பாதுகாப்புப் படை தலைமை இயக்குநர் திரு. மனோஜ் யாதவா, உளவுத் தகவல்களின் அடிப்படையில் பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்த கவனம் செலுத்தப்படும் என்றார்.

குறிப்பாக பெண் பயணிகளுக்கு எதிரான குற்றச் சம்பவங்களைத் தடுக்க மாநிலங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இரண்டாவது இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 90 ரன் எடுத்துள்ளது.

லீட்ஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மூன்றாம் நாளான நேற்று இங்கிலாந்து 465 ரன்னுக்கு ஆட்டமிழந்த நிலையில், இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இந்தியா 96 ரன் முன்னிலை பெற்றுள்ளது. இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 471.

<<<<>>>>

உலகக்கோப்பை பாரா வலுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

ஆடவர் பிரிவுகளில் **Joby Mathew** ஒரு தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

**Gulfam Ahmed** ஆடவர் 59 கிலோ எடைப்பிரிவிலும், **Ramubhai Bambhava** 72 கிலோ எடைப்பிரிவிலும் வெண்கலப் பதக்கத்தை வென்றனர்.

<<<<>>>>

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா 4-3 என்ற கோல் கணக்கில் பெல்ஜியத்தை வென்றது.

**<<<<The End>>>>**